BOC Relax				
கணக்கின் தன்மை	**வாடிக்கையாளருக்கான நன்மைகள்**	**ஆரம்ப வைப்புகளும் கட்டணங்களும்**	**தகுதி**	**முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்**
விசேட முதலீட்டுக் கணக்கு	**வட்டி வீதம்** தற்போதுள்ள வட்டி வீதங்களை https://www.boc.lk/ratestariff#rupee-deposit-rates என்ற இணைப்பிற் சென்று பார்வையிடவும் உங்கள் முதலீட்டுக்கு 3 வைப்புத் திட்டங்கள் அதிக மாத வருவாயை ஈட்டித்தரும் நிலையான வைப்பு மாதாந்தக் கொடுப்பனவு / வட்டி 30 நாட்களுக்கு ஒருமுறை கணக்கிடப்பட்டு வாடிக்கையாளரால்	**ஆரம்ப வைப்பு** – கீழ்க்காணும் இணைப்பில் பார்வையிடவும் https://www.boc.lk/personalbanking/investment-plans/investment-accounts/boc-relax **கணக்கைப் பராமரித்தலும் பிற கட்டணங்களும்** – கணக்குத் திறக்கும் உறுதிப்படுத்தல் கடிதத்தை வழங்குதல் **வரிகள்** – வட்டியானது இலங்கை அரசாங்கத்தால் மற்றும்/அல்லது கட்டுப்பாட்டு அதிகாரசபையால் அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தப்படும் முற்பண வருமான வரி, பிற வரிகள், அறவீடுகள் (ஏதும் இருந்தால்),	இலங்கையை வதிவிடமாகக் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இக்கணக்கைத் திறக்கலாம். தனிநபர் கணக்காகவோ கூட்டுக் கணக்காகவோ திறக்கப்பட முடியும். இலங்கை வங்கியில் இலங்கை ரூபாயில் சேமிப்பு / நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவது முன் நிபந்தனையாகும். (புதிய வாடிக்கையாளர் எனின் BOC Relax கணக்கைத் திறப்பதற்கு முன்னர் சேமிப்பு / நடைமுறைக் கணக்கொன்றைத் திறத்தல் வேண்டும்.) **கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்** இலங்கை வங்கியின் BOC Relax கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்ப படிவத்தைப் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும். - தேசிய அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு - தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின்	இக்கணக்குத் தன்னியக்கமாக புதுப்பிக்கப்படாது. ஆனால் தன்னியக்கமாக முடிவுறுத்தப்படக்கூடியது. இக்கணக்கிலுள்ள முதல் தொகை கணக்குத் திறக்கும் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிற்கு அனுப்பப்படும். முதிர்வுக் காலத்திற்கு முன்னர் முடிவுறுத்தப்படும் கணக்குகளுக்கு சாதாரண நிலையான வைப்புக் கணக்குகளுக்கான தண்ட வட்டி கணக்கிடும் முறைமையைப் பின்பற்றி தண்ட வட்டி கணக்கிடப்படும். அந்த வகையில், குறித்த தண்ட வட்டியானது வைப்பிலிருந்து அதாவது முதல் தொகையிலிருந்து அறவிடப்படும். இக்கணக்குடன் தொடர்புபட்ட அனைத்து விதிகள், நிபந்தனைகளையும் பற்றி அறிய கணக்குத் திறக்கும் படிவத்தைப் பார்க்கவும்.

	பரிந்துரைக்கப்படும் சேமிப்பு / நடைமுறைக் கணக்கிற்கு அனுப்பப்படும்	சட்டரீதியான வரிகள் என்பவற்றுக்கு உட்பட்டவையாகும்.	முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் - விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள். -	

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.